

மெட்ரோ ரெயில் நிலையத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள திருநங்கைகள்.

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் 13 திருநங்கைகளுக்கு பணி

## 'பெருமையுடன் முன்னேறுவோம்' என்கிறார்கள்

சென்னை வண்ணாரப் பேட்டை முதல் விம்கோ நகர் வரையிலான ரெயில் நிலையங்களில் 13 திருநங்கை களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பட்டப்படிப்பு படித்துள்ள அவர்கள் டிக்கெட் கவுண்டர், பார்க்கிங் பகுதி மற்றும் பொது மக்கள் வரவேற் பாளர் உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

திருநங்கைகளுக்கு மெட்ரோ ரெயில் நிலையங் களில் பணி வழங்கப்பட்டு இருப்பது பொதுமக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

புது வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையத்தில் மட்டும் 7 திருநங்கைகள் பணியில் அமர்த்தப்பட்டு உள்ளனர். மற்றவர்கள் வேறு மெட்ரோ ரெயில் நிலையங்களில் பணி செய்து வருகின்றனர்.

இவர்களில் வியாசர்பாடி சர்மா நகரை சேர்ந்த பவானி, தண்டையார்பேட்டையை சேர்ந்த கனிமொழி பி.ஏ. பட்டதாரிகள் ஆவர். நாகர்கோவிலை சேர்ந்த மாவீர்மாறன், சிந்தாதிரி பேட்டையை சேர்ந்த சித்ராதேவி எம்.ஏ. முடித்துள்ளனர்.

தண்டையார்பேட்டையை சேர்ந்த பார்கவி, பழைய வண்ணாரப்பேட்டையை சேர்ந்த சுமித்ரா பி.காமும், வேளச்சேரியை சேர்ந்த அருண் கார்த்திக் கம்ப்யூட்டர் சயின்சும் படித்துள்ளனர்.

மெட்ரோ ரெயில் நிலையங்களில் கிடைத்த பணியின் மூலம் தங்களது வாழ்வாதாரம் முன்னேறும் என்று அவர்கள் நம்பிக்கை யுடன் தெரிவித்து உள்ளனர்.

### டிக்கெட் வழங்குவது

புதுவண்ணாரப்பேட்டை ரெயில் நிலையத்தில் பயணிகளுக்கு டிக்கெட் வழங்குவது மற்றும் பயணிகளின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் பணியில் 30 வயதான திருநங்கை வினித்ரா தேவி அமர்த் தப்பட்டு உள்ளார். பொரு ளாதாரத்தில் முதுகலை பட்டம் பெற்ற அவர் தனது பணி குறித்து பெருமையாக கூறியதாவது:-

பல வருடங்களாக துன் பங்களை தாங்கிய பின்னர் இந்த வாய்ப்பை நாங்கள் பயன்படுத்த விரும்புகிறோம். இருளில் மூழ்கி இருப்பதை உணர்ந்த ஒருவருக்கு இது நம்பிக்கையின் ஒளியாக உணர்கிறோம். இதனை பற்றிக் கொண்டு பெருமையுடன் முன்னேறுவோம்.

**கஜகிருஷ்ணன்:-** மாநில அள விலான கிரிக்கெட் வீரராகவும், தேசிய அளவிலான கூடைப்பந் தாட்ட வீரராக வும் இருந்தேன். மக்கள் எங்களையும், எங்கள் வேலையையும் பார்க்கும் போது சகோதரத்துவமாக அதிக அளவில் ஊக்கம் அளிப்பார்கள்.



புதுவண்ணாரப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையத்தில் பயணிகளுக்கு டிக்கெட் வழங்கும் திருநங்கை.

பவானி, கனிமொழி, பார்கவி ஆகியோர் கூறும் போது, "துன்புறுத்தலை எதிர் கொள்வது முதல் பாகுபாடு காண்பது வரை அனைத்தையும் பார்த்திருக் கிறோம். இப்போது மக்க ளுடன் நேரடியாக தொடர்பு கொள்ள முடியும் என்பதால் இந்த வேலையை செய்ய பெரிதும் எதிர்பார்க்கிறோம்.

இதற்கு பின்னர் எங்களை பலர் தேடுவார்கள் என்ப தில் நாங்கள் உறுதியாக உள் ளோம். பொதுமக்களுடன் நல்ல தொடர்பு கொண்டுள் ளதால் முழு திருப்தியுடன் உள்ளோம். எங்களை வேலைக்கு அமர்த்திய சென்னை மெட்ரோ ரெயில் நிலைய நிர்வாகத்தினருக்கு நாங்கள் கடமைப்பட்டு உள்ளோம்.

**பொறியியல் பட்டதாரி அருண்கார்த்திக்:-** நான் பகுதி நேர வேலைகளை செய்து பல ஆண்டுகளாக போராடினேன். தனியாக உயிர் வாழ்வது முதல் எல்லா முரண்பாடுகளையும் எதிர்த்து போராடி இருக்கி றேன். இந்த பணியில் சேர்ந்ததால் நான் சாதித்து இருக்கிறேன்.

நாங்கள் எதற்காக இருக் கிறோம் என்பதை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். எங்களுக்கு எதிராக பாகுபாடு காட்ட மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு அவர்கள் நம்பிக்கையுடன் தெரி வித்தனர்.